# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2243 - 2021 අගෝස්තු මස 27 වැනි සිකුරාදා - 2021.08.27

*2243 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1734 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1738 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1740 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1742 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1747 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1733- B 082263 - 5403 (2021/08)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

**Procurement For Rehabilitation of 20 Nos. Bogie Container Flats Egyptian Stock**

Prourement No. SRS/F 7764

*01.* Procurement For Rehabilitation of 20 Nos. Bogie Container Flats Egyptian Stock *என்பதன் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (உயர் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார். அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அற்றோணித் தத்துவத்தின் மூலம் அவர்கள் வலுவூட்டப்பட்டதன் ஊடாக உற்பத்தியாளர்கள் அவர்களது விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.*

*02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.*

*03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்று கீழேயுள்ள முகவரியில் 2021.08.04 ஆந் திகதியிலிருந்து 2021.09.06 அந் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 ணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.*

*புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,*
*புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,*
*ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை,*
*தொலைபேசி இல. : 94(11) 2438078 அல்லது 94(11) 2436818.*
*தொலைநகல் இல. 94 (11) 2432044.*
*மின்னஞ்சல்* : srs.slr@gmail.com
*இணையத்தளம்* : www. railway.gov.lk

*04.* Bogie Container Flats *அல்லது அதற்குச் சமமான வடிவமைத்தல் உற்பத்தி மற்றும் புனரமைத்தலுடன் விலைமனுதாரர் செயற்பட வேண்டும்.*

*05. 2021.08.04 ஆந் திகதியிலிருந்து 2021.09.06 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 26,000.00 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படாலாம்.*

*06. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணைத் தொகையானது 1,400,000.00 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இருத்தல் வேண்டும்.*

*07. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2021.08.24 ஆந் திகதியன்று மு. ப. 10.00 இற்கு இரத்மலானையிலுள்ள பிரதான எந்திரவியல் பொறியியலாளரின் அலுவலகத்தில் நடைபெறும்.*

*08. 2021.09.07 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே*

திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பு இலக்கம் : SRS/F. 7764

8-492

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

இலங்கைப் புகையிரத சேவைகள் கிழக்கு மாவட்டத்தில் கந்தளாய் யார்ட்டிற்கு SUIT EN 45 E1 ரயில்களுக்கு 5,000 LESS HIGH CONCRETE SLEEPERS களின் வழங்களுக்கான பெறுகை

பெறுகை - IFB No. -SRS F. 7780

01. இலங்கை புகையிரத சேவைகள், கிழக்கு மாவட்டத்தில் கந்தளாய் யாட்டிற்கு SUIT EN 45 E1 ரயில்களுக்கு 5,000 LESS HIGH CONCRETE SLEEPERS களின் வழங்களுக்கான உள்நாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடம் இருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகளின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடாத்தப்படும்.

03. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க மற்றும் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு வார நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை 2021.08.09 ஆந் திகதி தொடக்கம் 2021.09.08 ஆந் திகதி வரை வேலை நாட்களில் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

புகையிரத களஞ்சியங்கள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியங்கள் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை,
தொலைபேசி இல. : 94(11) 2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இல. 94 (11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

04. விலைமனுதாரர்கள் விலைமனுப்பட்டியல்களின் பிரதிகளுடன் சேர்த்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் இலங்கை புகையிரத சேவைகளுக்கு 5,000 இற்கும் அதிகமான Concrete Sleepers அல்லது 50 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி ஒன்றுக்காக pre - stressed Concrete அல்லது 500 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி ஒன்றுக்காக pre - stressed Concrete Poles களை வழங்கியிருத்தல் வேண்டும்.

05. 12,500.00 ரூபா மாத்திரமான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2021.08.09 ஆந் திகதி தொடக்கம் 2021.09.08 ஆந் திகதியன்று வரை பி.ப. 3.00 மணி வரை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்கள் அத்தியட்சகரின் அலுவலகத்தின் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

06. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை 500, 000.00 ரூபா தொகையை கொண்டதும் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கியினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதம் ஒன்றாகவும் இருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்களை கீழுள்ள முகவரிக்கு 2021.09.09 அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (சிரேஷ்ட),
புகையிரத களஞ்சியங்கள் அத்தியட்சகர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு, (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பு இலக்கம் : SRS/F. 7780

8- 411

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

## PROCUREMENT FOR THE PURCHASE OF 400 NOS. 12V, 215AH, 20HR RATED LEAD ACID BATTERIES FOR LOCOMOTIVE STARTING TO SRI LANKA RAILWAYS

Procurement No. SRS F. 7763

01. இலங்கை புகையிரத சேவைக்கு 400 Nos. 12V, 215 ah, 20Hr Rated Lead Acid Batteries for Locomotive Starting என்பதன் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் ( உயர் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார். அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அற்றோணித் தத்துவத்தின் மூலம் அவர்கள் வலுவூட்டப்பட்டதன் ஊடாக உற்பத்தியாளர்கள் அவர்களது விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்று கீழேயுள்ள முகவரியில் 2021.08.10 ஆந் திகதியிலிருந்து 2021.09.27 ஆந் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியங்கள் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை,
தொலைபேசி இல. : 94(11) 2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இல. 94 (11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

04. ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரத்திற்கு 05 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு Locomotive / DMU starting Lead Acid Batteries உற்பத்தியாளராக விலைமனுதாரர்/ உற்பத்தியாளர் இருத்தல் மற்றும் கடந்த மூன்று (03) ஆண்டுகளில் Locomotive Starting Lead Acid Batteries 500 அல்லது அதற்கு மேற்பட்ட ஓடர்களை உற்பத்தியாளர் / வழங்குநர்கள் பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் அவற்றிற்கு ஒன்று வெளிநாட்டு புகையிரத சேவைக்காக இருத்தல் வேண்டும்.

05. 2021.08.10 ஆந் திகதி முதல் 2021.09.27 ஆந் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 5,300.00 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

06. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணைத் தொகையானது 220,000.00 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இருத்தல் வேண்டும்.

07. 2021.09.28 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பு இலக்கம் : SRS/F. 7763

8- 456

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT OF 150M/T HARD FOUNDRY COKE (RK42/7) TO SRI LANKA RAILWAY

Procurement No. SRS/F. 7748

01. இலங்கை புகையிரத சேவைக்கு 150M/T HARD FOUNDRY COKE (RK42/7) என்பதன் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் (உயர் மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார். அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அற்றோணித் தத்துவத்தின் மூலம் அவர்கள் வலுவூட்டப்பட்டதன் ஊடாக உற்பத்தியாளர்கள் அவர்களது விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்று கீழேயுள்ள முகவரியில் 2021.08.06 ஆந் திகதியிலிருந்து 2021.09.08 ஆந் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை,
தொலைபேசி இல. : 94(11) 2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இல. 94 (11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

04. Hard Foundry Coke உற்பத்திகாக நடப்பு ஆண்டிற்காக ISO 9001 தொடரை அல்லது ஏதாவது ஏனைய சமமான சான்றிதழ்களை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

05. 2021.09.08 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 3,500.00 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படாலாம்.

06. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணைத் தொகையானது 200,000.00 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இருத்தல் வேண்டும்.

07. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2021.08.26 ஆந் திகதி நடைபெறும்.

08. 2021.09.09 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு ( உயர் மட்டம்),
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பு இலக்கம் : SRS/F. 7748

8- 472

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.09.04 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ. சீ. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2021, ஓகத்து 12.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கு இலக்கம் | வாகனப் பதிவு இலக்கம் | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 60338/MT/20 | EP BEO - 5679 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம் | 01 |
| 2. | 62877/MT/ 21 | EP MB-5843 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம் | 01 |
| 3. | 62821/E/21 | EP TC - 9367 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | 62425/MT/20 | EP BBZ -1806 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | AR/240/21 | NP BAI - 2002 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 61723/E/21 | EP BDT - 5821 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 8. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 9. | No Number | | துவிச்சக்கர வண்டி | 07 |
| 10. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 11. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 13. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 15. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |

| தொ. இல. | வழக்கு இலக்கம் | வாகனப் பதிவு இலக்கம் | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 16. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 17. | No Number | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18. | 54207/E/18 | | காஸ் சிலிண்டர் | 01 |
| 19. | AR/496/21 | | காஸ் சிலிண்டர் | 01 |
| 20. | 63706/E/21 | | காஸ் சிலிண்டர் | 01 |
| 21. | AR/496/21 | | ரெகுலேட்டர் மற்றும் அடுப்பு | 01 |
| 22. | 63706/E/21 | | ரெகுலேட்டர் மற்றும் அடுப்பு | 01 |
| 23. | 55159/E/18 | | வெற்று பரல் | 01 |
| 24. | 54207/E/18 | | வெற்று பரல் | 01 |
| 25. | 59672/E/20 | | வெற்று பரல் | 04 |
| 26. | 58827/E/19 | | வெற்று பரல் | 02 |
| 27. | AR/495/21 | | வெற்று பரல் | 04 |

*8- 493*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## *2022 ஆம் ஆண்டிற்கான மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை*

*2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2022, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் கள்ளுத்தவறணைகளில் நொதித்த கள்ளு சில்லறைக்கு விற்பனை செய்வதற்கு முழுமையான சலுகைகளுடன் வாங்குவதற்காக 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 207 ஐக் கொண்ட வர்த்தமானியில் சுங்கவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட கள்ளு விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2021.10.15 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரையில் மல்லவபிட்டிய பிரதேச செயலாளரினால் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. கள்ளுத் தவறணையை வாடகைக்கு வாங்குவதற்கு முன்வருபவர்கள் குறித்த விலைமனு மாதிரிப்படிவத்தை உரியவாறு பூர்த்தி செய்து கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை குறித்துரைக்கப்பட்ட விலைமனு வைப்புத் தொகையைச் செலுத்தி ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் காசாளர் கிளையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றுக் கொண்ட பெறுமதிச் சான்றிதழுடன் உறையில் இட்டு அதற்கு முத்திரை இட்டு, அவ்வுறையில் இடது மூலையில் தான் விலைமனு கோருகின்ற கள்ளுத் தவறணையின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாக எழுதி உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது இப் பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலம் மல்லவபிடிய பிரதேச செயலாளருக்கு கிடைக்குமாறு செய்ய முடியும். குறித்த மாதிரிப்படிவத்தை ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*3. விலைமனுதாரர்களினால் விலைமனுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும்போது விலைமனுப் பத்திரத்திரங்களில் செய்யப்படுகின்ற அனைத்து மாற்றங்களுக்கும் விலைமனுதாரரின் முழுமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.*

*4.விலைமனு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியான 2021, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இப் பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.*

*5.எவ்வித காரணங்களும் அறிவிக்காமல் விலைமனுப் பத்திரங்கள் அல்லது விலைமனு பத்திரம் அனைத்தையும் நிராகரிக்கும் உரிமை மல்லவபிடிய பிரதேச செயலாளருக்கு உரித்தானதாகும்.*

6. தனிச்சலுகையுடன் வாங்கிய நபர் என்று அறிக்கைப்படுத்திய பின் வெற்றிகரமான விலைமனுதாரர்களினால் அவ்வாறு அறிவிக்கப்படும் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணையினை செலுத்தி விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

7.கள்ளுத்தவறணைகளை கொண்டு நடாத்துவதற்காக விலைமனுதாரர்களினால் பொதுமக்களின் எதிர்ப்பு ஏற்படாத தகுந்த இடம் ஒன்றினை தேர்ந்தெடுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் நிலைமை சம்பந்தமாக விலைமனு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வெற்றிகரமான விலைமனுதாரரினால் அதுபற்றி பிரதேச செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. 2021, ஒற்றோபர் 15 ஆந் திகதி கள்ளு விற்பனையில் திருப்திகரமான கோரிக்கை இல்லாவிட்டால் 2021.11.17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் கள்ளு விற்பனை இவ்விடத்தில் கொண்டு நடாத்தப்படும்.

9. மேலதிக தகவல் தேவைப்படின் இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

என். ஏ. ஏ. எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர்,
மல்லவபிட்டிய.

2021, ஓகத்து 09 .

**அட்டவணை**

**மல்லவபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத் தவறணைக்கான அனுமதி- 2022**

| பெயர் மற்றும் இலக்கம் | பத்துவ | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய பிரதேசம் | விலைமனு வைப்புப் பணம் | விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய நேரம் | கள்ளுத் தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| கடுபிடிய இலக்கம் 01 | வேவுட வில்லி ஹத்பத்துவ | கடுபிடிய | ரூபா 1,000.00 | 2021.10.15 மு.ப.10.30 | மு.ப.11.00 மற்றும் பி.ப.5.00 | பி.ப.2.00 மற்றும் பி.ப.8.00 |

8-341

---

**2022 ஆம் ஆண்டிற்கான கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

வத்தளை பிரதேச செயலாளர் பிரிவு

2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2022, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படும் போது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டக் கள்ளுத் தவறணைகளைக் குத்தகை விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்,

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்கத்தில் மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் “.... இலக்க .............. கள்ளுத்தவணைக்குரிய கேள்விப்பத்திரம்” எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2021.09.27 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதியன்று 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2021.09.27 ஆந் திகதி காலை 10.30மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்கார்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விற்பனை பெறத்தவறும் தவறணைகள் ஏதும் இருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2021.10.29 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

7. இது விடயமாக மேலதிக விபரங்ளை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. டீ. டீ. சீ. ராஜீகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

**அட்டவணை**

| இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் வைப்பு ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும். | கேள்விப்பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 01. | வத்தளை | 01-திம்பிரிகஸ்யாய | 2021.09.27 காலை10.30 | 7,260 00 |
| 02 | வத்தளை | 02-உஸவெடகெய்யாவ | 2021.09.27 காலை 10.30 | 4,840 00 |
| 03. | வத்தளை | 07-போபிடிய | 2021.09.27 காலை 10.30 | 7,260 00 |
| 04. | வத்தளை | 08-மஹவத்த | 2021.09.27 காலை 10.30 | 6,050 00 |

8-495

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3) ஆம் பிரிவின் படி மானெல் டிரீம் ஹவுஸ் (பீவிரீ) எல்ரீடி (Manel Dream House (Pvt) Ltd) (பீவீ 85500) கம்பனியையும் செகுயர் இன்வெஸ்ட்மென்ட் (பீவீரீ) எல்ரீடி (Secure Investment (Pvt) Ltd) (பீவீ 87766) கம்பனியையும் ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிககள் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின்படி, மானெல் டிரீம் ஹவுஸ் (பீவிரி) எல்ரீடி (Manel Dream House (Pvt) Ltd) (பீவீ 85500) மற்றும் செகுயர் இன்வெஸ்ட்மென்ட் (பீவிரீ) எல்ரீடி (Secure Investment (Pvt) Ltd) (பீவீ 87766) ஆகிய கம்பனிகளின் பணிப்பாளர் சபைகள் இக்கம்பனிகளை ஒன்றிணப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

இவ் ஒன்றிணைந்த இரண்டு கம்பனிகளும் இனிவரும் காலங்களில் தனிக் கம்பனியாக மானெல் டிரீம் ஹவுஸ் (பீவீரீ) எல்ரீடி எனும் பெயரில் இயங்கவுள்ளது.

மேற்படி ஒன்றிணைப்பு 2021, செத்தெம்பர் 27 ஆந் திகதியிலிருந்தோ அல்லது கம்பனிகள் பதிவாளரினால் நிர்ணயிக்கப்படும் ஒரு திகதியிலிருந்தோ நடைமுறைக்கு வரும்.

பணிப்பாளர் சபைகளின் கட்டளைப்படி,

மானெல் டிரீம் ஹவுஸ் (பீவீரீ) எல்ரீடி,
செகுயர் இன்வெஸ்ட்மென்ட் (பீவீரீ) எல்ரீடி.

கம்பனிச் செயலாளர் இல. SEC/l(b)(l)/2005/3215.

8-496

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ்,* WILD ISLAND SAFARIS (PRIVATE) LIMITED *தனது பெயரை* AYU IN THE WILD HOLIDAYS (PVT) LTD *என மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். .-*

*கம்பனியின் முன்னைய பெயர்:* WILD ISLAND SAFARIS (PRIVATE) LIMITED
*கம்பனி இல.: பீவீ 90061*
*பதிவு முகவரி :* இல. 16, 2 ஆம் ஒழுங்கை, கல்பொத்த வீதி, நாவல
*கம்பனியின் புதிய பெயர்:* AYU IN THE WILD HOLIDAYS (PVT) LTD

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ்
செக்கரட்ரியல் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்.

*03 ஆம் மாடி,*
*இல. 11, காசல் ஒழுங்கை,*
*கொழும்பு 4.*

*8- 377*

---

## பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 08 ஆம் பிரிவுக்கு ஏற்ப 2021,ஓகத்து 10 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் ஹென்செல் டெக்ஸ்டைல் லங்கா ( பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் அதன் பெயரை பிரைடன்பேர்க் எபரல் லங்கா ( பிரைவேட்) லிமிடெட் என மாற்றிக் கொண்டுள்ளது என சொல்லப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2) இன் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது .-*

*கம்பனியின் முன்னைய பெயர்:* ஹென்செல் டெக்ஸ்டைல் லங்கா (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனி பதிவிலக்கம்: பீவீ 18003*
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* 195G, கால்ஷ்ரு கோர்ட், பேஸ்லைன் வீதி, கொழும்பு 09
*கம்பனியின் புதிய பெயர்:* பிரைடன்பேர்க் எபரல் லங்கா (பிரைவேட்) லிமிடெட்

மெனேஜர்ஸ் என்ட் செக்ரெடரீஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.
ஹென்செல் டெக்ஸ்டைல்
லங்கா (பிரைவேட்) லிமிடெட்.

*8-459*

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், மாலபே, தலங்கம வடக்கு, இல. 741 எனும் முகவரியில் வதியும் தேசிய அடையாள அட்டை இல. 691770362V கொண்ட கொஸ்வத்தகே ரஞ்ஜன் பத்மநாத் பெரேரா ஆகிய நான், 2015, யூன் 12 ஆந் திகதி அவுஸ்திரேலியா மெல்பன் நகரில் சட்டத்தரணி மலிந்த டீ மெல் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சட்டத்தரணி கொண்ங்- மின்ங் சய் என்பவரால் சாட்சி கூறப்பட்ட வெளிநாட்டு விசேட அற்றோணித்தத்துவத்தினால் மாலபே, தலங்கம வடக்கு, இல. 741 எனும் முகவரியில் வதியும் தேசிய அடையாள அட்டை இல. 702680263V கொண்ட கொஸ்வத்தகே கோசல ஹரிப்பிரிய பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்படுகின்றதென்றும், இதன் பின்னர் மேற்கூறப்பட்ட கொஸ்வத்தகே கோசல ஹரிப்பிரிய பெரேரா என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

*8-371*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில், மாலபே, தலங்கம வடக்கு, இல. 741 எனும் முகவரியில் வதியும் தேசிய அடையாள அட்டை இல. 691770362V கொண்ட கொஸ்வத்தகே ரஞ்ஜன் பத்மநாத் பெரேரா ஆகிய நான், 1996, செத்தெம்பர் 23ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எச். பெரேரா என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 3283 கொண்ட அற்றோணிப்பத்திரத்தினால், மாலபே, தலங்கம வடக்கு, இலக்கம் 741 எனும் முகவரியில் வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 702680263V கொண்ட கொஸ்வத்தகே கோசல ஹரிப்பிரிய பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்படுகின்றதென்றும், இதன் பின்னர் மேற்கூறப்பட்ட கொஸ்வத்தகே கோசல ஹரிப்பிரிய பெரேரா என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

*8-372*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, தெஹிவளை வீதி, இல. 72/ஏ எனுமிடத்தில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 630903335V கொண்ட வலவகே சுசந்த பெரேரா என்பவரால் கையொப்பமிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் ஆவணத்தில் 212 தொடர் 09 ஆம் பக்கம் 6507 நாட்குறிப்பு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கொழும்பு பகிரங்க நொத்தாரிசு எச். கே. ஜயதிஸ்ஸ வினால் உறுதி செய்யப்பட்ட இல. 5634 மற்றும் 2017.08.31 ஆந் திகதிய அற்றோணித்

தத்துவத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை 2021, செத்தெம்பர் 01 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாகவும் இதன் பிறகு அற்றோணி தத்துவக்காரர் வலவகே சுசந்த பெரேரா என்பவரால் மேற்கொள்ளப்படும் எந்த விடயங்கள் சம்பந்தமாகவும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

வலவகே லாலனீ பெரேரா.

இல. 576/பீ,
எக்கமுத்து மாவத்தை,
மெதிவலை வீதி,
தலவத்துகொட,
2021,ஓகத்து 04.

8-376

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பன்னிப்பிட்டிய, பொரளை வீதி, இலக்கம் 44 இல் மற்றும் தற்போது கதரினா, ரோயாணி 75, 001444 ரோமா R.M. இத்தாலி எனும் முகவரியில் வசிக்கும் களுகபுகே ஸ்ரீயாணி மனீஷா பெரேரா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 746130090V) தொன் அலக் ரோஹித முனசிங்க (தேசிய அடையாள அட்டை இலக்கம் 650370945V) ஆகிய நாங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் அனைத்து பிரசைகளுக்கும் இத்தால் அறியத்தருவது, எங்களால் பன்னிப்பிட்டிய, பொரளை வீதி, இல. 44 இல் வசிக்கும் களுகபுகே ஆரியரத்ன பெரேரா அல்லது கபுகே ஆரியசேன பெரேரா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 452333996V) ஆகியோருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு J.H.M.D. ஜெயசிங்க அவர்களினால் எழுதி உறுதிப்படுத்திய 2017, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதியுடைய இலக்கம் 2773 எனும் அற்றோணித் தத்துவத்தினை எங்களால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அற்றோணித் தத்துவப்பத்திரத்திற்கு இன்றிலிருந்து எவ்விதமான அதிகாரமும் இல்லை எனவும் சட்டத்தின் முன்னால் செயற்படுத்துவதற்கு முடியாது எனவும் மேலும் அந்த அற்றோணித் தத்துவப் பத்திரம் வெறுதுமான மற்றும் இரத்துச் செய்யப்பட்ட ஆவணம் என இதற்குப் பிறகு கருத முடியும்.

களுகபுகே ஸ்ரீயாணி மனீஷா பெரேரா.
தொன் அலக் ரோஹித முனசிங்க.

8-401

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிரசித்த நொத்தாரிசு இமாலி ரேணுகா குருகமவினால் 2015, பெப்புருவரி 12 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 555 எனும் அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் நுகேகொடை, செப்பல் லேன், இல. 33/5 எனும் முகவரியில் வசிக்கும் சதுன்சாகர அபேகுணவர்தன (தே.அ.அ.இல. 682721332V) ஆகிய நான், நுகேகொடை, செப்பல் லேன், இல. 33/5 என்ற முகவரியில் வசிக்கும் (தே.அ.அ. இல. 746762542ஏ) எனும் சமிலா ஹெட்டியாரச்சிகே என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவம் 2021.07.30 ஆந் திகதி முதல் செயற்படுமாறு இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சதுன் சாகர அபேகுணவர்தன.

8-402

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மாலபே, தலங்கம வடக்கு, இல. 743/52A ஐச் சேர்ந்த தற்போது இல. 33 VIA MANIN DANIELE 2012, மிலானோ, இத்தாலியில் வசிக்கும் கீகியனகே தொன் பிரியலால் ஆகிய நான், சட்டத்தரணியும் பகிரங்க நொத்தாரிசுமாகிய திரு. சோமபால எல்லாவலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஒற்றோபர் 12 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவ இலக்கம் 2267, மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மாலபே தலங்கம வடக்கு, இல. 743/52A ஐச் சேர்ந்த ராஜகருணா வாசல அத்தபத்து முதியன்சேலாகே குமாரி மொலகொட விற்கு வழங்கப்பட்ட மேற்படி அற்றோணித் தத்துவம் 2021, ஓகத்து 15 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்படுவதாக சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

கீகியனகே தொன் பிரியலால்.

8-403

---

## அற்றோணித் தத்துவம் மற்றும் அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, கந்தானை, பற்றிமா வீதி, 122 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திரு. ஆனந்த மனகே (தேசிய அடையாள அட்டை இல. 601400138V) அவர்களுக்கு சபிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் கம்பனியின் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அதன் வெளிநாட்டு இணைப்பு அலுவலகம் (பதிவிலக்கம் NF 518) சார்பகவும் மற்றும் இலங்கையில் அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாகவும் செயற்படுவதற்கு சபிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் கம்பனியால் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் மற்றும் தத்துவமானது மேற் குறிப்பிட்ட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அதன் வெளிநாட்டு இணைப்பு அலுவலகம் 2021, ஏப்பிறல் 25 ஆந் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளதால் 2021, மே மாதம் 12 ஆந் திகதி தொடக்கம் இவருக்கு வழங்கப்பட்ட இவ் அதிகாரம் மற்றும் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது என சபிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் கம்பனி இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறது.

SABIC INDIA PRIVATE LIMITED,
(CIN: U51109HR 1992PTCO 637571),
10 th Floor,Ambience Corporate Towerr, II,
Ambience Island,
Gurugam - 122001,
Haryana, India.

8-409

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அவுஸ்திரேலியா, விக்டோரியா, 3173, கீஸ்பரோ, பிரின்ஸ்டன் ட்ரைவ், இல.67, (No.67, Princeton Drive, Keysborough, Victoria, 3173, Australia) இல் வசிக்கும் (கடவுச்சீட்டு இலக்கம் N 2337230 ஐ உடைய) சாஹுல் ஹமீட் மொஹொமட் ஹலீம்டீன் ஆகிய நான், கண்டி பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். கங்காநாதவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதியும் கொண்ட கண்டி, மத்திய மாகாண, பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 904 ஆம் இலக்க நாளேட்டில் தொகுதி 154 தாள் 51 இல் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் கண்டி, மஹய்யாவ, கட்டுகஸ்தோட்டை வீதி, இலக்கம் 226 என்ற இடத்தில் வசிக்கும் (தே.அ.அ.இலக்கம் 893223703V) உடைய அப்துல் சலாம் மொஹொமட் ஷிபான் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி இரத்துச் செய்து வலுவற்றதாக்கியதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது. 2021ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிக்குப் பின்னர், மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் குறித்த அப்துல் சலாம் மொஹொமட் ஷிபான் நசாரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

சாஹுல் ஹமீட் மொஹொமட் ஹலீம்டீன்.

2021, ஓகத்து 13.

8-460

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 03, 13 ஆம் ஒழுங்கை, இலக்கம் 28 இல் வசிக்கும் (தே.அ.அ.இலக்கம் 552652096V) உடைய) சாஹுல் ஹமீட் மொஹொமட் ஹலீம்டீன் ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பீ. கலட்டுவாவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 2731 ஆம் 2011, யூலை மாதம் 06 ஆந் திகதியும் கொண்ட, கொழும்பு -7 பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 1932 ஆம் இலக்க நாளேட்டில் தொகுதி 06, தாள் 74 இல் பதிவு செய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, இலக்கம் 682 என்ற இடத்தில் வசிக்கும் (தே.அ.அ. இலக்கம் 552152816V உடைய) சஹாப்தீன் நாவஸ்தீன் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி இரத்துச் செய்து வலுவற்றதாக்கியதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிக்குப் பின்னர், மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் குறித்த சஹாப்தீன் நவாஸ்தீனினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

சாஹுல் ஹமீட் மொஹொமட் ஹலீம்டீன்.

2021, ஓகத்து 27.

8-461

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

